முதன்மை சார்பு நீதிமன்றம். விழுப்புரம்.

O.S.No.540/2023

Witness PW1

| | | | |
|---|---|---|---|
| பெயர்; | கலியவரதன் | மதம் | |
| த/பெ. | பாண்டுரங்கன் | தொழில்; | |
| ஊர் | தாங்கல் | வயது | 76 |
| மாவட்டம் | விழுப்புரம் | தேதி | 15.04.2026 |

இன்று (15.04.2026) சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு வாக்குமூலம் பதிவு செய்யப்படுகிறது.

சத்தியமாகச் சொல்கிறேன்.

முதல் விசாரணை

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். எனது தரப்பில் வா.சா.1 ஆக இருந்து எனது முதன்மை பிரமாண பத்திரிக்கை தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான் நிருபண வாக்குமூலத்தை படித்து பார்த்து நன்குபுரிந்து கொண்டு சாட்சியம் அளிக்கிறேன். எனது தரப்பில் கீழ்கண்ட ஆவணங்கள் தாக்கல் செய்கிறேன்.

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ1 | 1.5.1961 | வாதியின் தகப்பனார் பாண்டுரங்கன் வெள்ளச்சி(எ)செங்கேணி என்பவரிடம் இருந்து கிரையம் பெற்ற பத்திரம் கணினி நகல் |
| வா.சா.ஆ2 | 28.11.1997 | வாதி பெயருக்கு பதிவு செய்யப்பட்ட உயில் சாசன ஆவணம் அசல் (அதன் நிரூபணத்திற்கு உட்பட்டு குறியீடு செய்யப்படுகிறது. ) |
| வா.சா.ஆ3 | 25.12.2017 | பாண்டுரங்கன் அவர்களின் இறப்பு சான்று அசல் |
| வா.சா.ஆ4 | 15.10.2015 | 2ம் பிரதிவாதி 1ம் பிரதிவாதிக்கு ஏற்படுத்திய தானசெட்டில்மென்ட் பத்திரம் அசல் |
| வா.சா.ஆ5 | 27.5.2023 | வாதி வழக்கறிஞர் பிரதிவாதிகளுக்கு வழங்கிய சட்ட அறிவிப்பு அலுவலக நகல் |
| வா.சா.ஆ6 | 1.9.2023 | வில்லங்க சான்று கணினிநகல் |

3, 4 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை

எனது தந்தையார் பெயர் பாண்டுரங்கன் என்றால் சரிதான். எனது தந்தை பாண்டுரங்கன் வெள்ளச்சி என்ற செங்கேணி அம்மாளிடமிருந்து 1.5.1961ல் தாவா சொத்தை கிரையம் வாங்கியுள்ளார் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்திரம் விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 920/1961 ம் என்றால் சரிதான். தாவா சொத்தை என்னுடைய தகப்பனார் பாண்டுரங்கன் கலிவரதன் ஆகிய என் பெயருக்கு 28.11.1997ல் பதிவு செய்யப்பட்ட உயில் சாசனமாக எழுதி வைத்துள்ளார் என்றால் சரிதான். அந்த பத்திரம் விக்கிரவாண்டி

சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.44/1997 என்றால் சரிதான். அந்த உயில் சாசனத்திற்கு பிறகு தான் காசியம்மாள் பெயரில் தாவா சொத்து சர்வே எண்.302/12ல் 47 செண்ட் அரசு பட்டா எண்.163 எண்ணில் ஒதுக்கீடு செய்தது என்றால் சரிதான். அதன் பிறகு காசியம்மாள் பாபு என்பவருக்கு தானசெட்டில்மெனட் மூலம் தாவா சொத்தை கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த தானசெட்டில்மென்ட் விக்கிரவாண்டி சார்பதிவாளர் அலுவலக ஆவண எண் 3661/2015 என்றால் சரிதான். பதிவு செய்த மேற்படி ஆவணங்கள் தொடர்பாக 3, 4 பிரதிவாதிகளை நான் சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவா சொத்து சம்மந்தமாக வேறு எந்த ஆவணமும் பதிவு செய்யக்கூடாது என்பதற்காகத்தான் 3, 4 பிரதிவாதிகளை நான் தரப்பினராக சேர்த்துள்ளேன் என்றால் சரிதான். 3, 4 பிரதிவாதிகள் பொருத்து நான் நீதிமன்றத்தில் எந்தவித பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான்.

Taken down before me in Open Court and read over/interpreted to the witness and acknowledged by him/her to be correct.

Sd/.A.Tamilselvan,M.L.,

Principal Subordinate Judge,

Villupuram